SURESH' IAS ACADEMY




# 24.06.2026 செய்திகள்

## வெளிநாட்டு நன்கொடைகளுக்கான விதிமுறைகளை மத்திய அரசு கடுமையாக்குகிறது

» நிதி கண்காணிப்பு

- வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிகளில் செய்யப்பட்டுள்ள புதிய மாற்றங்களின்படி, வெளிநாட்டு நன்கொடைகளைப் பெற அனைத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தங்களது திட்டங்களின் குறிப்பிட்ட செயல்பாடுகள் மற்றும் புவியியல் வரம்பை வெளிப்படுத்த வேண்டும்.
- வெளிநாட்டு பங்களிப்புகள் கீழ்க்கண்ட 5 அனுமதிக்கப்பட்ட பிரிவுகளின் கீழ் மட்டுமே பெற முடியும்:

» கல்வி

- பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நூலகங்கள்
- கல்வி உதவித்தொகைகள்
- ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் சிந்தனைக் குழுக்கள்
- குடிமக்கள் விழிப்புணர்வு மற்றும் அரசியலமைப்பு உரிமைகள் தொடர்பான திட்டங்கள்

» பொருளாதாரம்

- வாழ்வாதாரத்தை உருவாக்குதல்
- திறன் மேம்பாடு
- வேளாண்மைத் துறைகள்
- தொழில்முனைவு மற்றும் குறுந்தொழில்கள்
- நிதி மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கம்

» மதம்

- வழிபாட்டுத் தலங்கள்
- மதக் கல்வி
- யாத்திரிகர்களுக்கான சேவைகள்
- தியான நிகழ்ச்சிகள்
- மத மரபுகளைப் பாதுகாத்தல்

» சமூக நலன்

- பொது சுகாதாரம்
- மறுவாழ்வு
- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
- பேரிடர் நிவாரணம்

» கலாச்சாரம்

- இந்திய கலைகள் மற்றும் மொழிகளைப் பாதுகாத்தல்
- அருங்காட்சியகங்கள், ஆவணக் காப்பகங்கள் மற்றும் கலாச்சார விழாக்கள்
- பாரம்பரியச் சின்னங்கள் மற்றும் மரபுப் பாதுகாப்பு

SURESH'

## சங்க கால மக்களின் வாழ்வியல் எச்சங்கள்

- கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே சங்க கால மக்களின் வாழ்வியல் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன.
- வரிஞ்சிப்பாக்கம், பூண்டி பகுதிகளில் மலட்டாறு அருகே செங்கல்சூளைக்காக தோண்டப்பட்ட பள்ளத்தில் ஆய்வு செய்தபோது, 3 உறை கிணறுகள் 100 மீட்டர் இடைவெளியில் ஆங்காங்கே இருந்தன. இவற்றில் ஒன்று முழுமையாக எட்டு அடுக்குகளை கொண்டதாக இருந்தது. மற்ற இரண்டும் சிதைந்த நிலையில் இருந்தன.
- மேலும் சங்ககாலத்தைச் சேர்ந்த சுடுமண் காதணி, கருப்பு, சிவப்பு நிற பானை ஓடுகள், கெண்டி மூக்குகள், குறியீடு பானை ஓடு, சுடு மண் குடுவை, செங்கற்கள் ஆகியவற்றை கண்டெடுத்தோம்.
- உறை கிணறுகள் சங்க காலத்து மக்கள் குடிநீருக்காக பயன்படுத்தியது என்பது தெரியவந்தது. இது போன்ற உறை கிணறுகள் தமிழகத்தில் கீழடி, பூம்புகார், பட்டறை பெரும்புதூர், அரிக்கமேடு, மாமல்லபுரம் போன்ற இடங்களிலும், விழுப்புரம் மாவட்டத்தில் திருக்கோவிலூர், பேரங்கியூர், செஞ்சி, திருவாமாத்தூரிலும், கடலூர் மாவட்டத்தில் கண்டரக்கோட்டை, உளுந்தாம்பட்டு, தளவானூர், அக்கடவல்லி போன்ற இடங்களிலும் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன.

## இழை பிரிகிறதா இந்திய - அமெரிக்க உறவு?

- இந்திய – அமெரிக்க உறவு, பல்லாண்டு கால உழைப்பில் நெய்யப்பட்ட ஆடை. அதன் இழைகள் இப்போது பிரிகின்றனவா? இல்லை என்கிறார் அமெரிக்க அதிபர் டிரம்ப். ஜூன் 17 அன்று நடைபெற்ற ஜி–7 மாநாட்டின் இடைநேரத்தில் பிரதமர் மோடியைச் சந்தித்த டிரம்ப், இந்தியாவும் அமெரிக்காவும் வெகு அணுக்கமாக இருப்பதாகச் செய்தியாளர்களிடம் கூறினார். அது உண்மையா அல்லது வெறும் புகழ்ச்சியா?

» கடல் மேல் பிரிந்த உயிர்

- ஜூன் இரண்டாம் வாரத்தில் (ஜூன் 8–11) ஓமன் வளைகுடாவில் மூன்று சரக்குக் கப்பல்களை அமெரிக்க ஏவுகணைகள் தாக்கின. இவை இந்தியக் கப்பல்கள் அல்ல. என்றாலும் மூன்று கப்பல்களிலும் இந்திய மாலுமிகள் இருந்தனர்.
- இதில் 'செட்டபெல்லோ' என்னும் கப்பலில் மூன்று இந்திய மாலுமிகள் உயிரிழந்தனர். மற்றவர்கள் மீட்கப்பட்டனர். இந்தக் கப்பல்கள் செய்த குற்றமென்ன? அவை தடை செய்யப்பட்ட ஈரானின் எரிபொருளைச் சுமந்து சென்றன. தடை செய்தது ஐநா போன்ற பன்னாட்டு அமைப்பா? இல்லை, அமெரிக்கா.
- இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், நமது மாலுமிகள் கொல்லப்பட்டதற்கு இந்திய அரசின் கண்டனத்தை ரூபியோவிடம் தெரிவித்தார். இதற்கு ரூபியோ அளித்த பதில், ஜூன் 13 ஆம் நாள் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக் குறிப்பாக வெளியானது – 'எல்லாச் சரக்குக் கப்பல்களும் அமெரிக்காவின் ஆணைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்; அமெரிக்கத் தடையை மீறி ஈரானின் எரிபொருளை ஏற்றிச் செல்வது சட்ட விரோதம்; அதை அமெரிக்கா சகித்துக்கொள்ளாது'.

» ரூபியோவின் பயணம்

- ரூபியோவின் பதிலில் எந்த மேற்பூச்சும் இல்லை. இது அமெரிக்கத் தரப்பை மட்டுமே உயர்த்திப் பிடிக்கிறது. ஆனால், மே கடைசி வாரத்தில் அவர் மேற்கொண்ட நான்கு நாள் இந்தியப் பயணம், இரு தரப்புக்கு இடையே பிரியும் இழைகளை இணைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
- இந்தப் பயணத்தில் கொல்கத்தா, ஆக்ரா, ஜெய்ப்பூர் ஆகிய நகரங்களுக்கு ரூபியோ போனார். பாரம்பரியப் பெருமை மிக்க அந்த நகரங்களில் கிடைத்த ஒளிப்பட வாய்ப்புகள் எதையும் அவர் தவறவிடவில்லை. அடுத்த டெல்லி பாரத மண்டபத்தில், ஏ.ஆர்.ரஹ்மானின் கச்சேரியுடன் விமரிசையாக நடைபெற்ற அமெரிக்க ஜனநாயகத்தின் 250 ஆம் ஆண்டுக் கொண்டாட்டத்திலும், தொடர்ந்து நான்கு நாடுகளின் கூட்டணியான 'குவாட்' கூடுகையிலும் பங்கேற்றார். விருந்துகளுக்கும் குறைவில்லை. இவையெல்லாம் இந்தப் பயணம் இரு நாட்டு உறவை மேம்படுத்தும் என்கிற தோற்றத்தை உருவாக்கின.

» உடன்படிக்கை

- செமிகண்டக்டர்கள், மின் வாகனங்கள், ஆயுதத் தொழில்நுட்பம் முதலான தயாரிப்புகளுக்குத் தேவையான அரிய வகைத் தாதுக்கள், தனிமங்கள் தொடர்பான உடன்படிக்கை ஒன்றில் ரூமியோ கையெழுத்திட்டார்.

- உடன்படிக்கை செயலாக்கம் பெற்றால், இந்தத் துறையில் நிலவி வரும் சீனாவின் மேலாதிக்கம் குறையும். இது முக்கியம ானது. அதே வேளையில், இந்தப் பயணம் இந்திய–அமெரிக்க வணிகம் மேம்பட உதவியதா?

» அமெரிக்காவின் தந்திரம்

- 2026 பிப்ரவரியில் அமெரிக்கா முன்மொழிந்த வணிக உடன்படிக்கை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருந்தது. அமெரிக்கப் பொருள்களை இந்தியா கூடுதலாக இறக்குமதி செய்துகொள்ள வேண்டும் என்பது அவற்றில் ஒன்று.
- இப்போது, இந்தியா இறக்குமதி செய்துகொள்ளும் அமெரிக்கப் பொருள்களின் மதிப்பு ஆண்டுக்கு 42 பில்லியன் டாலர்; இதை 100 பில்லியன் டாலராக உயர்த்த வேண்டும் என்பது நிபந்தனை.
- இதைத் தனது டெல்லி உரையில் ஒரு சாதனையாக ரூபியோ குறிப்பிட்டார். தனது வணிக நிபந்தனைகளைத் தளர்த்தி க்கொள்ள அமெரிக்கா தயாராகவில்லை என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.
- அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களுக்கான விசா சிக்கல்கள் அதிகமாகிவிட்டன. நிரந்தர வசிப்புரிமை (பச்சை அட்டை) வேண்டுவோர் சொந்த நாட்டிலிருந்து விண்ணப்பிக்க வேண்டும் என்று புதிய விதி வந்திருக்கிறது. இது இந்தியர்களை வெகுவாகப் பாதிக்கிறது.
- இந்த கெடுபிடிகள் குறித்து ரூபியோவிடம் முறையிட்டார் ஜெய்சங்கர். இதற்கு ரூபியோ அளித்த பதில் மழுப்பலானது. அது இந்தியர்களுக்குச் சாதகமாக அமையவில்லை.

» வலுவிழக்கும் நாற்கரம்

- அடுத்து 'குவாட்' (quad). இது quadrilateral என்பதன் சுருக்கம். தமிழில் நாற்கரம்–அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா ஆகிய நான்கு நாடுகளின் கூட்டமைப்பு. இந்த நான்கு நாடுகளும் இந்தோ–பசிபிக் பகுதியின் வெவ்வேறு முனைகளில் அமைந்திருப்பவை. இந்தப் பகுதியின் கடல்சார் கண்காணிப்பையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதுதான் நாற்கரத்தின் நோக்கம். அப்படித்தான் சொல்லப்படுகிறது
- எனில், உண்மையான நோக்கம் பெரிய ரகசியம் இல்லை. அது, ஆசிய அரங்கில் சீனாவின் செல்வாக்கை ம ட்டுப்படுத்துவதாக இருந்தது. அதில் இப்போது மாற்றம் வந்திருக்கிறது.
- மே 26 அன்று டெல்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டமைப்பின் அயலுறவு அமைச்சர் மாநாட்டில் ரூபியோ பங்கேற்றார். மாநாட்டின் முடிவில் வெளியான கூட்டறிக்கை, இந்தோ–பசிபிக் பகுதியில் அமைதியையும் சமாதானத்தையும் பேணுவதே எமது நோக்கம் என்றது.
- அறிக்கையில் இடம்பெறாத இரண்டு அம்சங்கள் தூக்கலாகத் தெரிந்தன. ஒன்று, இந்திய அழைப்பின் பேரில் விசாகப்பட்டினத்தில் கடற்படை அணிவகுப்பில் பங்கேற்று, ஊர் திரும்பிக் கொண்டிருந்த ஐ.ஆர்.ஐ.எஸ்.தேனா என்கிற ஈரானியக் கப்பலை இந்தியப் பெருங்கடலில் மார்ச் 4 ஆம் நாள் நீர்மூழ்கியால் தாக்கி மூழ்கடித்தது அமெரிக்கா.
- இது நாற்கரத்தின் ஆதாரக் கொள்கைகளுக்கு மட்டுமல்ல, சர்வதேச விதிமுறைகளுக்கும் எதிரானது.
- இரண்டு 2021 ஆம் ஆண்டு முதல் நாற்கரத்தின் ஆண்டுக் கூட்டங்களில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கெடுக்க வேண்டும். இது 2024 வரை நடந்தது. 2025, 2026 ஆம் ஆண்டுகளில் தலைவர்கள் டெல்லியில் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் சந்திக்கவில்லை. ஏனெனில், டிரம்ப் டெல்லிக்கு வரவில்லை; எப்போது வருவார் என்பது தெரியவில்லை.

» அமெரிக்க மாறுமா?

- இதற்கான காரணத்தை நாம் உய்த்தறியலாம். நீண்ட காலமாக அமெரிக்கா, தனது சீன எதிர்ப்புக்கு இந்தியாவைப் பயன்படுத்திக்கொண்டது. எனில், இப்போது சீனாவுடன் இணக்கமாகப் போக விழைகிறார் டிரம்ப்.
- அவரது சமீபத்திய சீனப்பயணம் சுட்டிக்காட்டுவதும் அதையேதான். இனி, அமெரிக்காவின் சீன எதிர்ப்பு மட்டுப்படும். இந்த வகையில் இந்தியாவின் உதவி அமெரிக்காவுக்கு அவசியம் இல்லாமல் போகும். நாற்கரம், கூடிப்பேசிப் பிரியும் தி ணைக் கச்சேரி ஆகக்கூடும்.
- ரூபியோவின் மே மாதப் பயணம் இந்தியாவோடு அமெரிக்கா நெருங்கி வருவதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி யது. அது தோற்றம் மட்டுமே. வணிகம், குடியேற்றம், அயலுறவு, கடல்சார் கண்காணிப்பு முதலான அமெரிக்கக் கொள்கைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான இழைகள் மென்மேலும் பிரிந்து வருவதைக் காண முடிகிறது.
- மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு இந்தியா தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். நமது இறையாண்மையையும் வணிக நலன்களையும் பாதுகாக்க மாற்று நடவடிக்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும்.